மூலம் அந்தக்குழு வருகிற நவம்பர் மாதம் கூடுகிறது. அப்போது இதை அங்கே வைத்து விவாதித்து, வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 57, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

57—

சூரக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை வெட்டன் விடுதிக்கு மாற்றுதல்.

**23003—திரு. எஸ். சண்முகநாதன்:*

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி யூனியன், சூரக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை வெட்டன்விடுதிக்கு மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 10-55

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, சூரக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, முள்ளங்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இருக்கிறது. அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சூரக்காடு என்ற குக்கிராமத்தில் இருந்தாலும், போக்குவரத்து வசதியுள்ள, சகல வசதியுள்ள வெட்டன்விடுதிக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. ஆகவே முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இருக்கிற உறுப்பினர்களுள் வெட்டன்விடுதியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, வெட்டன்விடுதி பகுதியைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருப்பார்களானால் அதன் அடிப்படையிலே வெட்டன்விடுதி பகுதிக்கு அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, சூரக்காடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்ற பெயரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஏதும் கறம்பக்குடி யூனியனில் இல்லை. என்றாலும் முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் தலைமையிடம் சூரக்காடு என்ற கிராமத்தில் இயங்கி வருகிறது. முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் சூரக்காடு மற்றும் 41 கிராமங்கள் உள்ளன. இந்த 41 கிராமங்களில் ஒன்றுதான் வெட்டன்விடுதி என்ற கிராமம். முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் மொத்தம் 2957 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதில் வெட்டன்விடுதி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் 190 உறுப்பினர்கள் மட்டுமே இருக்கிறார்கள். எனவே அங்கே இதை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பும் இல்லை, வசதியும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நியாய விலைக் கடைகள் ஏதும் நடத்துகின்றதா? அப்படி இருந்தால் வெட்டன்விடுதியில் ஒரு நியாய விலைக் கடை இருக்குமானால், அந்தப் பகுதி பயன் பெறும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், அங்கே உள்ள 41 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், வெட்டன்விடுதி பகுதி ஜங்ஷனாக இருக்கிற காரணத்தால், இதைக் கேட்கிறேன். அந்த வங்கி நியாய விலைக் கடைகளை நடத்தினால் அதில் ஒன்றை வெட்டன்விடுதிக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, முள்ளங்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியினால் மொத்தம் 10 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த 10 நியாய விலைக் கடைகளிலே ஒன்று, வெட்டன்விடுதி கிராமத்திற்கு அருகிலே இருக்கிறது. எனவே அங்கே உள்ள மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வசதியாகப் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல, இப்படிப்பட்ட கோரிக்கை பொதுமக்களிடமிருந்து இந்தத் துறைக்கு ஏதும் வரவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1994* நவம்பர் *8*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *58*, திரு. என். ஆர். இராஜேந்திரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

58—

காட்டுமன்னார்கோயில் தொகுதியில் நரிக்குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம்.

21820—திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் வாழும் நரிக்குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார்கோயில் சட்டப் பேரவைத் தொகுதி காந்தி நகர் பகுதியில் வாழும் *50* நரிக்குறவர்கள் ஆற்றுப் புறம்போக்கில் குடியிருப்பதால், இலவச வீட்டுமனை இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டதும், நிதிநிலைமைக்கேற்ப வீடுகள் கட்டிக் கொடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் ஆட்சியில்தான் நரிக்குறவர்கள் வளர்ச்சிக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து வருகிறோம். அங்கே வாழ்கின்ற நரிக்குறவர்கள் மிகவும் சிறிய வீடுகளில் வாழ்கிறார்கள். மழைக் காலங்களில் அடிக்கடி சேதம் ஏற்பட்டு, அவர்களுக்கு அரசு நஷ்டஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது வருஷந்தோறும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கு விரைவாக வீட்டுமனை வழங்கி, வீடுகள் கட்டித் தர அரசு அவசரமாகப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகளை அவர்களுக்குக் கொடுப்பதற்காக